

நீலகிரி உதகை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் தமிழ்நாடு பொதுப்பணிகள்,நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுத்துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் ஆய்வு செய்து அங்கு நடைபெற்று வரும் கட்டுமான பணிகள் மற்றும் கல்லூரி விடுதிகள், குடிநீர், பிரிவுகள், அவசர சிகிச்சை, நடைபாதை, சமையலறை வசதிகள் போன்றவற்றை பார்வையிட்டனர். உடன் நெடுஞ்சாலைத்துறை செயலாளர்,தலைமை பொறியாளர், மருத்துவ கல்லூரி முதல்வர், மற்றும் அரசு அதிகாரிகள் உள்ளனர்.

## ஆவடி தொகுதி மக்களுக்கு ரூ.6000 நிவாரணம்!

திருவள்ளூர், டிச. 19 -

ஆவடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருநின்றவூர் 24, 22, 18, 14, 15, 16, 17, 12, 13, ஆகிய வார்டுகள் திருமுல்லைவாயல் 28வது வார்டுக்குட்பட்ட நியாய விலைகடையில் நிவாரணத் தொகையை முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்ட செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் ஆவடி மாநகர மேயர் ஜி.உதயகுமார், அமுதா பேபி சேகர், சன் பிரகாஷ், பேபி சேகர், மாலா பிரகாஷ், சரளா நாகராஜ் சசிகலா ஜீவானந்தம், ஜெ. அன்பழகன், எஸ்.கமலக்கண்ணன், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### திருப்பூர் மாவட்ட தொழில் மையம் சார்பில்

# 21 பயனாளிகளுக்கு ரூ. 5.40 கோடி மானியத்துடன் ரூ.22.03 கோடி கடனுதவி!

## அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன் - என்.கயல்விழி செல்வராஜ் வழங்கினர்!

திருப்பூர், டிச. 19 -

திருப்பூர் மாவட்டம், திருமுருகன்பூண்டி பாப்பீஸ் வீஸ்டா ஹோட்டலில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை சார்பில் திருப்பூர் மாவட்ட அளவிலான முதலீட்டாளர் களுடனான களநிகழ்வு கூட்டத்தினை துவக்கி வைத்து, தொழில் கடனுதவிகள் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் தலைமையில், திருப்பூர் வடக்கு மாநகர கழக செயலாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ் குமார், தலைவர், இந்திய ஏற்றுமதி நிறுவனங்களின் கூட்டமைப்பு மற்றும் தென்பிராந்திய பொறுப்பாளர் (ஆயத்த ஆடை ஏற்றுமதி கழகம்) எ.சக்திவேல் ஆகியோர் முன்னிலையில் மாவட்ட தொழில் மையம் சார்பில் 21 பயனாளிகளுக்கு ரூ5.40 கோடி மானியத்துடன் ரூ.22.03 கோடி மதிப்பீட்டில் அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம், புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத்திட்டம், வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம், பிரதம மந்திரியின் வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம், மாநில மூலதன மானியத் திட்டம் ஆகிய திட்டங்களின் சார்பில் தொழில் தொடங்குவதற்கு கடன் ஒப்புதல் ஆணைகளையும், 37 நிறுவனங்களுக்கு பல்வேறு தொழில் தொடங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களையும் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் மு.பெ. சாமிநாதன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் வழங்கினர்.

அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தெரிவித்ததாவது : தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு பல்வேறு வகையில் தொழில் முன்னேற்றத்திற்காக திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் திருப்பூர் மாவட்ட அளவிலான முதலீட்டாளர்களுடனான களநிகழ்வு கூட்டம் இன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 25.08.2022 அன்று திருப்பூர் மாவட்டத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை சார்பில் "தோள் கொடுப்போம் தொழில்களுக்கு" திருப்பூர் மண்டல மாநாட்டைத் தொடங்கி வைத்தார்கள். தற்போது அதே காரணத்திற்காக இந்த களநிகழ்வு கூட்டம் இங்கு நடைபெறுகிறது.

தமிழ்நாடு அரசு பொறுப்பேற்றதிலிருந்து 8 மாதம் காலம் கொரோனா தொற்று காலமாக இருந்தது. அந்த காலகட்டத்தை தாண்டி குறுகிய காலத்தில் தொழில் வளர்ச்சியில் மாநிலங்கள் அளவில் 14வது இடத்தில் இருந்து தற்போது 3வது இடத்திற்கு முன்னேறி உள்ளது. உலகளவில் வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்கும் பொருட்டு தமிழ்நாடு அரசு எதிர் வரும் 2024 ஜனவரி 7 மற்றும் 8 ஆகிய நாட்களில் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டினை சென்னையில் நடத்த உள்ளது. அனைவரையும், உள்ளடக்கிய நிலையான மற்றும் நீடித்த வளர்ச்சியினை நோக்கமாக கொண்டு 1 டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தை அடைவதில் இம்மாநாடு முக்கிய பங்கு வகிக்கும். நாட்டிலேயே எம்.எஸ்.எம்.இ. எண்ணிக்கையில் தமிழ்நாடு 2ம் இடமும், இந்தியாவில் இரண்டாவது பொருளாதார மாநிலமாகவும், எளிதாக வணிகம் செய்யும் தரவரிசையில் 14 இடத்திலிருந்து 3 இடத்திற்கு முன்னேறி உள்ளது. மொத்த உள்நாட்டு உற்பத்தி 9.22 சதவீதம், ஏற்றுமதியில் 8.4 சதவீதமாக உள்ளதில் அதில் பெரும் பங்கு நமது திருப்பூர் மாவட்டம் பிடித்துள்ளது. அதனுடன் சமூக அரசியல், பொருளாதார வாழ்வாதாரம் மற்றும் கலாச்சார மேம்பாடு அடைய செய்வதும் ஆகும். தமிழ் அரசின் இலக்கு 2030ம் ஆண்டில் 1 டிரில்லியன் டாலர்கள் பொருளாதாரத்தை எட்டும் என்ற வகையில் தமிழ்நாடு அரசு செயல்பட்டு வருகிறது. 2022-2023 ல் பின்னலாடை ஏற்றுமதியில் அகில இந்தியா அளவில் மதிப்பு ரூ.61,764 கோடி அதில் திருப்பூர் மாவட்டம் ரூ.34,358 கோடி இது 55.6 சதவீதமாக உள்ளது. ஜவுளித்துறை இரு பிரிவுகளாக பிரிக்கப்பட்டு தனியாக இயக்குநர் நியமினம் செய்யப்பட்டதில் திருப்பூர் மாவட்டத்திற்கென தனி கிளை அலுவலகம் உள்ளது. டவுன் ஆப் எக்ஸ்போரட் எக்சலன்ஸ் திட்டத்தில் திருப்பூர் மாவட்டத்திற்கு ரூ.10.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நமது திருப்பூர் மாவட்டத்திற்கு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் முதலீட்டிற்கான இலக்காக ரூ.6,551 கோடி நிர்ண யிக்கப்பட்டு இதுவரை ரூ.6.603.24 கோடிக்கான 439 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் பரிமாற்றிக் கொள்ளப்பட்டன. இதன் மூலம் 20,612 வேலைவாய்ப்புகள் உருவாக வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் நிலவும் தொழில் துறைக்கு உகந்த சூழல் அமைப்பு, மேம்பட்ட உள்கட்டமைப்பு, திறமை வாய்ந்த பணியாளர்கள், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கு வழங்கப்படும். முக்கியத்துவம், வணிகரீதியான வசதி வாய்ப்புகள் ஆகியவை தொழில் துறையில் முதலீடு செய்வோர்க்கு சிறந்த வாய்ப்புகளை வழங்குகிறது. விண்வெளி, தகவல் தொழில் நுட்பம், செயற்கை நுண்ணறிவு. ஆட்டோ மொபைல், மின்சார வாகனங்கள், ஜவுளி, தரவு பகுப்பாய்வு மற்றும் மேம்பட்ட பொருட்கள் உட்பட பல்வேறு துறைகள் அரசிடமிருந்து சிறப்பு கவனம் மற்றும் ஆதரவைப் பெற்று முதலீட்டு வாய்ப்புகளை பெற்றிட உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024 முக்கிய தளமாக செயல்படும். குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் தங்கள் தயாரிப்புகளை உலக முதலீட்டாளர்கள் மாநாடு நிகழ்வில் காட்சிப்படுத்துவதற்கும், அதன் மூலம் வாங்குபவர், விற்பனையாளர் மற்றும் பல்வேறு பங்குதாரர்களை இணைக்கும் தளமாக உலக முலீட்டாளர்கள் மாநாடு 2024 அமையும். மேலும் இம்முதலீட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்ட நிறுவனங்களுக்கு அனைத்து விதமான அனுமதிகள் மற்றும் உரிமங்கள் ஆகியவற்றை அனைத்து துறைகளிட மிருந்து விரைவாக உரிய காலத்தில் பெற்றிட ஒற்றை சாளர தகவு வழியாக பெற்றுத் தர மாவட்டத் தொழில் மையம் மூலமாக நடவடிக்கை எடுக்கப்படும். விரையில் டாலர் சிட்டி என திருப்பூர் நகர் மீண்டும் புத்துணர்வு பெறும் சூழலை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏற்படுத்தி கொடுப்பார்கள் என்பதை இத்தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன் என அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில்,பொது மேலாளர் (மாவட்ட தொழில் மையம்) மா.இராமலிங்கம், திருப்பூர் ஏற்மதியாளர்கள் சங்க தலைவர் கே.எம்.சுப்பிரமணியன், திருமுருகன்பூண்டி நகர் மன்றத் தலைவர் என். குமார், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஈ.தங்கராஜ், திருமுருகன் பூண்டி நகரக் கழகச் செயலாளர் மூர்த்தி, மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் ரவி, கிளை மேலாளர், (தமிழ்நாடு தொழில் முதலீட்டுக்கழகம்) லட்சுமி நாராயணன், உதவி இயக்குநர் மாவட்ட தொழில் மையம்) கிரீசன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மாவட்ட, நகர, ஒன்றிய கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், தொழில் வணிக நிர்வான சங்க பிரதிநிதிகள் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### தொழிலாளர் துறையால் தயாரிக்கப்பட்ட

# கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழித்தல் விழிப்புணர்வு குறும்படம்!

## அமைச்சர் சி.வெ.கணேசன் வெளியிட்டார்!

சென்னை, டிச.19-

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழித்தல் குறித்தான விழிப்புணர்வு குறும்படத்தினை வெளியிட்டார்.

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன் 15.12.2023 அன்று தலைமைச் செயலகத்தில் தொழிலாளர் துறையால் தயாரிக்கப்பட்ட கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழித்தல் குறித்தான விழிப்புணர்வு குறும்படத்தினை வெளியிட்டார். கொத்தடிமைத் தொழிலாளர் முறை என்பது சமுதாயத்தின் வளர்ச்சிக்கும், நாட்டின் எதிர்காலத்திற்கும் ஒரு மிக பெரிய அச்சுறுத்தலாகவும், தடைக் கல்லாகவும் அமைந்துள்ளது. இந்த கொத்தடிமைத் தொழிலாளர் முறையை 2030ம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டிலிருந்து முற்றிலும் அகற்றிட தமிழ்நாடு அரசு உறுதி பூண்டுள்ளது.

தொழிலாளர் துறையின் சீரிய அமலாக்க முயற்சிகளால், 01-04-2017 முதல் 30-11-2023 வரையில், 1612 கொத்தடிமைத் தொழிலாளர்கள் மீட்கப்பட்டு, ரூ.3.52 கோடி உடனடி நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு, கொத்தடிமைத் தொழிலாளர் முறையை ஒழிப்பதில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதல்களின் பேரில் சீரிய முயற்சிகளை எடுத்து வருகிறது. இதில் ஒரு அங்கமாக 2023-2024ம் நிதியாண்டில் கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழித்தல் குறித்தான விழிப்புணர்வு குறும்படத்தினை தயாரித்திட ரூ.4.00 இலட்சம் அரசு நிதி ஒதுக்கீடு செய்து அரசாணை வெளியிடப்பட்டு, இந்த ஒதுக்கீட்டில் இக்குறும்படம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இக்குறும்படம் கொத்தடிமைத் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துவோர் மற்றும் பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.

இந்நிகழ்வின்போது தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் குமார் ஜெயந்த், முதன்மைச் செயலாளர்/ தொழிலாளர் ஆணையர் முனைவர் அதுல் ஆனந்த் மற்றும் கூடுதல் தொழிலாளர் ஆணையர் (நிர்வாகம்) திருமதி சி. ஹேமலதா ஆகியோர் உடனிருந்தனர்.



புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் குன்றாண்டார்கோவில் மத்திய ஒன்றியம் மங்கத்தேவன்பட்டி ஊராட்சி மோசக்குடியில் புதிதாக அமைக்கப்பட்ட 'பேவர் பிளாக்" சாலையை மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் திறந்து வைத்தார். நிகழ்வில் ஒன்றிய செயலாளர் சி.சண்முகம், மாவட்ட கவுன்சிலர் டி.செல்வம், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் எஸ்.வி.ஆர்.ஸ்டாலின், ஒன்றிய கவுன்சிலர் ராஜராஜசோழன், கந்தர்வக்கோட்டை தொகுதி சமூக வலைதள பொறுப்பாளர் எழில் ராஜா, ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் பி.செல்லத்துரை, உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் பலர் உள்ளனர்.

# "திராவிட மணிமகுடம்!"



அன்னை சொர்ணம்,
கல்யாண சுந்தரர்
அருமைத் திருமகனார்!
ஐயா, அண்ணா
வழியில் வந்த
அறிவுப் பெருமகனார்!
பொன்னெழுத் தாலே
பொறிக்கப் படுமோர்
புகழின் திருவுடையார்!
பூக்களை வெல்லும்
புன்னகை மின்னும்
பொலிவின் எழிலுடையார்!

குறைந்திட லற்றக்
குணத்தின் கடலாம்!
கொள்கைக் குறள்நெறியார்!
கொடுத்துப் பதிலைத்
தொடுக்கும் சிந்தனைக்
கூர்மை முனைமுறியார்!
அறம்தான் உயிராம்!
மறந்தும் வாழ்வில்
அரசியல் பிழையறியார்!
அன்பழ கர்! உயர்
பண்பழ கர்!தமிழ்
அமுத மொழிநடையார்!

தனக்குக் கழகம்,
தமிழ், தமிழ் நாடு
தவிர வேறறியார்!
தன்மா னத்தின்
தகைசால் ஏந்தல்!
தாடியில் லாப்பெரியார்!
"எனக்குக் கிடைத்த
இன்னோர் அண்ணன்"
என்றுரைத் தார்கலைஞர்!
"என்பெரி யப்பா"
இழந்தேன் அவரை,என்
றழுதார் தளபதியார்!

வெற்றிலை மீது
சுண்ணாம்பை அளவாய்த்
தடவும் விரல்அழகு!
வெண்கல மணிபோல்
கிண்கிணீர் ஓசை
விளையும் குரல்அழகு!
சற்றும் மங்காத
சூரிய வெளிச்சம்
பொங்கும் விழியழகு!

சட்டைப் பொத்தான்
இடத்தில் மாறித்
தங்கும் தனியழகு!

தோட்டா வைப்போல்
துளைத்துப் பகையைச்
சொல்லால் சுடும்அழகு!
தோளில் கிடக்கும்
துண்டை எடுத்துத்
தோளில் இடும்அழகு!
" காட்டு ரார்" இவர்
களத்தில் செந்தமிழ்க்
கணைகள் விடும்அழகு!
கடக்களி றொப்ப
நடக்கும் அழகு!
கண்ணே படும்அழகு!

அசையும் ஒவ்வோர்
அடியும் முட்கள்!
அனைத்தும் கடந்த திடம்!
ஆயிரம் ஆண்டுகள்
அழியாச் சுவடுகள்!
அண்ணல் நடந்த தடம்!
திசைகள் வணங்கிடும்
செம்மல்! கல்விச்
செந்தேன் நிறைந்தகுடம்!
தீட்டும் சரித்திரம்
காட்டும் வரிசையில்
" திராவிட மணிமகுடம்!"

பீடு தரும்!தனிப்
பெருமை தரும்!அவர்
பேச்சே சொரணைதரும்!
"பெருமிதம்" என்றால்
"பேரா சிரியர்"
பெயரே நினைவுவரும்!
நீடு நெடும்புகழ்
நிலைத்திருக் கும்!அவர்
நிழலும் அழகுபெறும்!
நித்திரைக் குள்ளும்
கனவாய் வருவார்!
நெஞ்சம் அமைதியுறும்!



... கவிச்சுடர்
**கவிதைப்பித்தன்.**